# தமிழீழ கிண்ணத்திற்கான தெரிவுமுறை

அடுத்த வருடத்திலிருந்து தமிழீழ கிண்ணத்திற்கு சுவிசில் உள்ள 6 கழகங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன. இதுவரை காலமும் இருந்த வந்த நடைமுறைக்கேற்ப மாவீரர் வெற்றிக்கிண்ணத்தில் அரையிறுதியாட்டம் வரை நுழையும் கழகங்களுடன் சம்மேளனத்தின் புள்ளிவிபரத்தில் முதல் இரண்டு இடங்களையும் பெறும் கழகங்களும் தமிழீழ கிண்ணத்திற்கு தெரிவுசெய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**தெரிவுமுறையின் விபரங்கள்:**

⇨ ஆரம்பம்: 2008 முதலாவது வெளியரங்க சுற்றுப்போட்டிகளிலிருந்து.

| | |
|---|---|
| வெற்றி | 3 புள்ளிகள் |
| சமநிலை | 1 புள்ளிகள் |
| தோல்வி | 0 புள்ளிகள் |
| Fair Play கழகம் | 3 புள்ளிகள் |
| சுற்றுப்போட்டியில் பங்கேற்றல் | 5 புள்ளிகள் |
| சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பித்த பின் சுற்றுப்போட்டி நடைபெறுவதற்கு குறுகிய காலம் இருக்கும் போது சுற்றுப்போட்டிக்கு சமூகமளிக்கமுடியாமையை அறிவித்தல் | -5 புள்ளிகள் |
| Fairplay | 3 புள்ளிகள் |

**புள்ளிகளின் விபரம்:**

ஒரு கழகத்தின் மொத்த புள்ளிகளும் அக்கழகம் பங்குபற்றிய மொத்த போட்டிகளினாலும் பிரிக்கப்படும்.

**2008ஆம் ஆண்டிற்கான தமிழீழ கிண்ணத்திற்காக தெரிவு செய்யப்படும் 6 கழகங்கள்:**

**இதுவரை:**

1) 1. முதலாம் இடம் - மாவீரர் கிண்ணம் 2008
2) 2. இரண்டாம் இடம் - மாவீரர் கிண்ணம் 2008
3) 3. மூன்றாம் இடம் - மாவீரர் கிண்ணம் 2008
4) 4. நான்காம் இடம் - மாவீரர் கிண்ணம் 2008

**புதிது:**

**5) 1. முதலாம் இடம் - சம்மேளனத்தின் புள்ளிவிபரங்களின் தெரிவுமுறை 07/08**
**6) 2. இரண்டாம் இடம் - சம்மேளனத்தின் புள்ளிவிபரங்களின் தெரிவுமுறை 07/08**

மாவீரர் கிண்ணத்தில் அரையிறுதியாட்டத்திற்குள் நுழையும் கழகங்கள் சம்மேளனத்தின் புள்ளிவிபரங்களில் முதலாம், இரண்டாம் இடங்களை பெறுமாயின் அக்கழகங்களை பின் தொடர்ந்து நிற்கும் கழகங்கள் தமிழீழ கிண்ணத்திற்கு தெரிவாகும்.

⇨ 2009 ஆண்டிற்கான தமிழீழ கிண்ணத்திற்காக தெரிவு மாவீரர் கிண்ணம் 2008 சுற்றுப்போட்டிகளிலிருந்து - மாவீரர் கிண்ணம் 2009 சுற்றுப்போட்டிகள் வரை. (தமிழீழ கிண்ணச்சுற்போட்டி தவிர்ந்த அனைத்து சுற்றுப்போட்டிகள்.)